


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 327

திங்கட்கிழமை
20 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# இலங்கையில் நடந்த மீறல்கள் இதுவரை 1,12,348 ஆவணங்கள்

## ஐ.நா. பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தால் டிஜிட்டல் கட்டமைப்பில் பாதுகாப்பாக பேணுகை

**ஜெனிவா, ஒக்ரோபர் 20**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தால் இலங்கையில் நடந்த மீறல்கள் தொடர்பாக கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி வரை ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 348 ஆவணங்கள் திரட்டப்பட்டுள்ளன. அவற்றில் 7 ஆயிரத்து 459 ஆவணங்கள் திறந்த மூலங்களில் இருந்தும், ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 889 ஆவணங்கள் இரகசிய மூலங்களில் இருந்தும் திரட்டப்பட்டுள்ளன.**

13

செம்மணிப் படுகொலைக் குற்றவாளியான

## சோமரத்னவின் சத்தியக்கடதாசியும் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தில்

கொழும்பு, ஒக்.20
மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி கொலை மற்றும் 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் சாட்சியமளிக்கத் தயார் என தூக்குத் தண்டனைக் கைதி

15

## வல்வெட்டித்துறைப்படுகொலைக்கு 4.5 பில். ரூபா இழப்பீடாக பரிந்துரை

யாழ்ப்பாணம், ஒக்.20
இந்தியப் படையினரால் 1989ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப்பட்டபடுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் சொத்து இழப்புக்காக 4.5 பில்லியன்

15

## இஷாராவுடன் தொடர்பிலிருந்த பலரின் விவரம் பொலிஸாரிடம்

### நேற்றும் ஒரு பெண் கைது

கொழும்பு, ஒக்.20
நேபாளத்தில் கைது செய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தியுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி

15



## நாளை முதல் மழை அதிகரிக்கும்

கொழும்பு, ஒக்.20
நாளை 21ஆம் திகதிக்குப் பின்னர் மழையுடனான காலநிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு

13

இந்திய இராணுவத்தால் படுகொலைசெய்யப்பட்டு

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 10 சிறுவர்கள் புதைக்கப்பட்டனர்!

### கண்கண்ட சாட்சியமான அனந்தராஜ் அதிர்ச்சித் தகவல்
### புதைகுழியை ஆய்வு செய்யுமாறும் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.20

இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட 10 சிறுவர்கள் புதைக்கப்பட்டுள்ள உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் புதைகுழி ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்று வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு கோரியுள்ளது.

13

## எரிபொருள் கொடுப்பனவை நிராகரிக்கும் 48 எம்.பி.க்கள்!



கொழும்பு, ஒக்.20
நாடாளுமன்றத்தால் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவு தேவையில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய உட்பட 48 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்

13

## போதைமாத்திரையுடன் யாழ்.நகரில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.20
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15

## சபாநாயகர் மீது பிரேரணை நாளையே இறுதித்தீர்மானம்

கொழும்பு, ஒக்.20
சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் நாளை இறுதி

15

## வீட்டிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.20
வீடொன்றில் தனிமையில் வாழ்ந்த முதியவர் நேற்றுக் காலை

15


### முச்சந்தி முரளி

'அப்ப இஞ்சை இந்திய, இலங்கை ஆமிக்காரர் இருந்த இடமெல்லாம் புதைகுழியள் தான் இருக்குது கண்டியளோ'

தமிழின அரசாட்சியின் சின்னமான

## சங்கிலியன் பூங்காவை அழிக்க நல்லூர் பிரதேசசெயலகம் முயற்சி

### சி.வி.கே. சிவஞானம் வடக்கு ஆளுநருக்குக் கடிதம்



யாழ்ப்பாணம், ஒக்.20
நல்லூர் சங்கிலியன் பூங்காவை இல்லாமல் அழிக்கும் நோக்கில், பூங்கா அமைந்துள்ள காணியை நல்லூர் பிரதேச செயலகம் தனது தேவைக்கு கையகப்படுத்த எத்தனிக்

15

## வழிபடச் சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.20
யாழ்ப்பாணம், அராலியில் ஆலயம் ஒன்றுக்கு வழிபடச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 19.10.2025 | திகதி 19.10.2025 | திகதி 19.10.2025 | திகதி 19.10.2025 | திகதி 19.10.2025 | திகதி 19.10.2025 | திகதி 19.10.2025 | திகதி 19.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4229 | சீட்டிழுப்பு இலக்கம் 1296 | சீட்டிழுப்பு இலக்கம் 0255 | சீட்டிழுப்பு இலக்கம் 2335 | சீட்டிழுப்பு இலக்கம் 5987 | சீட்டிழுப்பு இலக்கம் 2017 | சீட்டிழுப்பு இலக்கம் 0562 | சீட்டிழுப்பு இலக்கம் 0103 |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கினம் தனுசு | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கினம் துலாம் |
| | | | சுப்பர் இலக்கம் 19 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 48 52 62 69 | வெற்றி இலக்கங்கள் 21 40 48 58 | வெற்றி இலக்கங்கள் 1 0 0 3 | வெற்றி இலக்கங்கள் 30 54 59 62 | வெற்றி இலக்கங்கள் 1 7 0 1 6 3 | வெற்றி இலக்கங்கள் 34 64 66 75 | வெற்றி இலக்கங்கள் 0 1 6 3 | வெற்றி இலக்கங்கள் 20 51 63 |
| விசேட எழுத்து N | | | | | விசேட எழுத்து Q | | |

# இனப்படுகொலையாளிகளை கைதுசெய்ய திராணியில்லையா?

## அரசிடம் சுமந்திரன் எம்.பி. கேள்வி



**மன்னார், ஒக்.20**

**சர்வதேச ரீதியாக உள்ள கடத்தல்காரர்கள், கொலைகாரர்கள், போதைப் பொருள் வர்த்தகர்களைக் கைதுசெய்ய திராணியுள்ள இந்த அரசாங்கத்துக்கு உள்நாட்டிலேயே இனப்படுகொலைகளைப் புரிந்தவர்களைக் கைதுசெய்து சட்டத்துக்கு முன்நிறுத்த முடியாதா?**

இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அரசாங்கம் சர்வதேசக் குற்றவியல் நடைமுறைகளைக் கையாண்டே தப்பியோடிய குற்றவாளிகளைக் கைது செய்து கொண்டுவருகிறார்கள். அதற்கு எங்களுடைய பாராட்டுகள். அதை வரவேற்கிறோம்.

அதேவேளையிலே இந்தக் குற்றச் செயல்களைச் செய்கிறவர்களை மட்டும் கைதுசெய்வதில் பிரயோசனம் கிடையாது. தமிழ் மக்களுக்கு எதிராக மிகப்பெரிய சர்வதேச குற்றங்களைப் புரிந்தவர்கள் நாட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள். அவர்கள் சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையும் இந்த அரசாங்கம் எடுக்கவில்லை.

இனப்படுகொலையாளிகளைக் கைது செய்வதற்கோ சட்டத்தின் முன்னால் நிறுத்துவதற்கோ அவர்கள் தயங்குகிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் செய்தால் எங்களுடைய மக்களுடைய நன்மதிப்பை அவர்கள் பெறுவார்கள் - என்றார். (ச-213)

## 24 மணிநேரத்தில் 4,601 பேர் கைது



கொழும்பு, ஒக்.20

நாட்டில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 601 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவியல் மற்றும் போதைப் பொருள் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 19.10.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம் 0695 |
| ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கம் 6 8 6 4 5 4 | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி 19.10.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2961 | ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கம் 10 20 35 68 | |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 19.10.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கம் 17 60 62 63 | வெற்றி வாரம் 5022 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி 19.10.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் 0795 | வெற்றி இலக்கம் 19 30 42 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 19.10.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| தனுசு | வெற்றி இலக்கம் 04 14 18 51 | சீட்டிழுப்பு வாரம் 4673 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 19.10.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து A | சுப்பர் இலக்கம் 12 | வெற்றி இலக்கம் 14 21 50 72 | வெற்றி வாரம் 2137 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 19.10.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கம் 05 24 33 48 | வெற்றி வாரம் 2787 |

## மாற்றமில்லை மறுசீரமைப்பே

*ஐ.ம.சக்தி தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.20

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் மாற்றம் வரப்போவதில்லை. எனினும், கட்சிக்குள் மறுசீரமைப்பு இடம்பெற்று வியூக மாற்றம் இடம்பெறும் என்று அந்தக் கட்சியின் உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

இரு ஜனாதிபதித் தேர்தல்கள் உட்பட நான்கு தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி தோல்வியைச் சந்தித்துள்ளதால், தலைமைப்பதவியில் மாற்றம் வேண்டும் என்ற கருத்தை சிலர் முன்வைத்துவரும் நிலையிலேயே, துஷார இந்துனில் மேற்கண்டவாறு கூறினார்.

மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகிவருகின்றது. எந்த முறைமையில் தேர்தல் நடைபெறும் என்பது தொடர்பான தகவல் வெளியான பின்னரே பரப்புரை வியூகம் வகுக்கப்படும் - என்றார். (ச-44)

## சாரதி அனுமதிப்பத்திரங்களை 3 மாதங்களுள் வழங்கத் திட்டம்

கொழும்பு, ஒக்.20

தற்போது நிலுவையில் உள்ள 3 இலட்சத்துக்கும் அதிகமான சாரதி அனுமதிப் பத்திரங்களை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் அச்சிட்டு வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன்கூடிய புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தையும் இந்த ஆண்டு அச்சிட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்குத் தேவையான ஒரு மில்லியன் அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன என்றும் அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

சாரதி அனுமதிப்பத்திரங்களை விரைவாக வழங்குதவதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் அச்சிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (எ-இ)

## மாகாணசபைத் தேர்தலில் தனித்தும் கூட்டாகவும் மலையகக்கட்சிகள்

கொழும்பு, ஒக்.20

மாகாணசபைத் தேர்தலில் தனித்தும், கூட்டணியாகவும் களமிறங்குவதற்கு மலையகத்திலுள்ள பிரதான இரு கட்சிகள் உத்தேசித்துள்ளன.

அதற்கமைய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, பதுளை உள்ளிட்ட மாவட்டங்களில் தனித்து சேவல் சின்னத்திலும் ஏனைய சில மாகாணங்களில் கூட்டுச்சேர்ந்தும் போட்டியிடவுள்ளது. தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து களமிறங்குவதுடன் சில மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுவது பற்றியும் பரிசீலிக்கப்பட்டுவருகின்றது. (ச-44)



## குடைசாய்ந்தது கனரக வாகனம்

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ். வலிகாமம் வடக்கு மயிலிட்டிப்பகுதியில் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலைய வீதியில் கனரக வாகனமொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியது.

கட்டுமானப் பணிகளுக்காகச் சிமெந்துக் கலவையைக் கொண்டு சென்ற வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காயங்களுக்கு மருந்திடாத தமிழ்த்தேசியம் பயனில்லை!

## உளநல மருத்துவ நிபுணர் சி.சிவதாஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

**போருக்குப் பின்னரான அல்லது ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னரான காலப்பகுதியில் எமது மக்களுக்கு மிக அவசியமானது குணமாக்கலாகும். சமூகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளைக் குணப்படுத்தாமல் தேசியத்துக்கான எதிர்காலம் பற்றிப் பேசிப் பயனில்லை என்று உளநல மருத்துவ நிபுணர் சி. சிவதாஸ் தெரிவித்துள்ளார்.**

மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதித் தொகுத்த 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' என்ற நூலின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், பொதுவாக நாங்கள் எல்லோருமே கறுப்பு, வெள்ளை மனநிலையிலேயே இருக்கிறோம். கறுப்புக்கும், வெள்ளைக்கும் இடையில் சாம்பல் நிறமென்று ஒன்று இருப்பதை யாருமே ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை. அதாவது விட்டுக்கொடுப்பு இணங்கிப் போதல் மனநிலை என்பது யாரிடமும் அறவே இல்லை.

தமிழ் அரசியல் தலைவர்களிடம் காணப்படும் தன்னகம்பாவமே இன்றுவரை எமக்குத் தீர்வொன்றுகிடைக்காததற்குக் காரணமாகும்.

ஆரம்பத்தில் உளப்பாதிப்பு என்பது ஒரு நோய் நிலையாக இருந்தது. போர் முடிவ டைந்ததும் அது இடைத்தங்கல், புனர்வாழ்வு முகாம்களை மையப்படுத்தி அதிகரித்தது. அதன் பின் போதைப்பாவனை, சிறைச்சாலைகளிலும், குடும்பங்களின் பிளவுகளிலும் சுழன்றுகொண்டு நிற்கிறது.

எனவே மக்கள் தேசியத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னர் குணமாக்கல் மேற்கொள்ளப் படவேண்டும். இல்லாதுவிடின் தமிழ்த் தேசிய அரசியல் என்பதற்கு எதிர்காலமே இல்லை - என்றார். (ச-இ)



# இஷாரா செவ்வந்திக்கு 90 நாள்கள் தடுப்பு!

கொழும்பு, ஒக்.20

நேபாளத்தில் இருந்து அண்மையில் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கின் பிரதான குற்றவாளியான இஷாரா செவ்வந்தியைத் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவரை 90 நாள்கள் தடுத்துவைத்து விசாரணை செய்வதற்குப் பொலிஸார் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரியிருந்தனர். பொலிஸாரின் இந்தக் கோரிக்கைக்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. (ச-இ)

# பத்மேவின் கைதால் சிக்கிய செவ்வந்தி!

## தோடுகளை விற்றுப் பிழைப்பு செவ்வந்தி தகவல்

கொழும்பு, ஒக்.20

ஐரோப்பா நாடொன்றுக்குச் சென்று சொகுசு வாழ்க்கை வாழ்வதற்குத் திட்டமிட்டிருந்த செவ்வந்தியின் கனவு கெஹேல்பத்தர பத்மே கைதுசெய்யப்பட்ட பின்னரே கலைந்தது என்று தெரியவந்துள்ளது.

பொலிஸ் விசாரணையின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளாரென சிங்கள வார இதழொன்றில் வெளியாகியுள்ள கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் தங்கி இருந்த காலகட்டத்தில் தனக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டதாகவும் கடைசியில் தனது தோடுகளைக்கூட விற்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் இஷாரா செவ்வந்தி தெரிவித்துள்ளார்.

அளுத்கடை நீதிமன்றத்துக்குள் சுட்டுக்கொலை செய்யப்பட்ட கணேமுல்ல சஞ்சீவவைக் கொலைச் சம்பவத்துக்குப் பிறகு செவ்வந்தியை வெளிநாட்டுக்கு அனுப்புதல், அவருக்கான செலவு உட்பட அனைத்துச் செலவுகளையும் கெஹேல்பத்தர பத்மேயே கவனித்து வந்துள்ளார்.

எனினும், அவர் இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்ட பின்னரே செவ்வந்திக்குத் தலையிடி ஏற்பட்டுள்ளது. "பத்மே அண்ணா, கைதுசெய்யப்பட்ட பின்னர் நான் முழு நம்பிக்கையையும் இழந்துவிட்டேன். வாழ்வதற்கு வழி இன்றிப் பரிதவித்தேன். சாப்பிடுவதற்குக்கூட காசு இருக்கவில்லை. கடையில் எனது தோடுகளை விற்றேன். இலங்கைப் பணத்தில் 75 ஆயிரம் ரூபா கிடைக்கப்பெற்றது. அதனைக் கவனமாகச் செலவழித்தேன்" என்றும் செவ்வந்தி தெரிவித்துள்ளாரென குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# கல்விச் சீர்திருத்தம் தீவகத்தில் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.20

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பிரகாரம் 2026ஆம் ஆண்டுமுதல் முன்னெடுக்கப் படவுள்ள பாடத்திட்டங்களின் வழிகாட்டல் பொறிமுறை தொடர்பாக ஆசிரியர்களுக்கான செயலமர்வின் கள ஆய்வொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தீவகக் கல்வி வலயத்தால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நில அமைவுகள், சூழலின் அக, புறத் தன்மைகள் மற்றும் தாவரங்களின் இனப்பரம்பல், நீர் நிலைகளின் அவதானிப்புகள் குறித்து ஆசிரியர்களுக்குக் கள ஆய்வினூடாக விளக்கமளிக்கப் பட்டது. (ச-27)



# அது எங்கட வேலையில்லை

சட்டப்படிதான் வேலை செய்வம் எண்டுறதுதான் அரசாங்க உத்தியோகத்தர்மாரின்ர நினைப்பு. தங்களுக்கு செய்யக் கஷ்டமான வேலையளைத் தட்டிக்கழிக்கிறதுக்கு உடன "ஈகோர்ட், இலையான் கோர்ட்" எண்டு ஏதோவொரு ரூல்ஸைத் தூக்கியந்திடுவினம். ஆனால் அப்பிடித் தட்டிக்கழிக்கிறதால சனத்துக்குத்தான் கரைச்சல். இப்ப மழைக்காலம் துடங்கிட்டுது. கடும் மழையடிச்சால் றோட்டு வழியளில நெடுத்து வளர்ந்திருக்கிற மரக்கொப்புகள் அப்பிடியே சரிஞ்சு, மரத்தையும் விழுத்திப்போடும். அப்பிடி விழேக்க கறண்ட் கம்பியளுக்கு மேல விழுந்தால் அவ்வளவுதான். வயரெல்லாம் அறுந்து அந்த ஏரியா முழுக்க பவர்கட்டாகிடும். மழைபெய்துகொண்டிருந்தால், அந்த மரத்தை அப்புறப்படுத்தி, திரும்ப வயர் இழுத்து , கறண்டை வரப்பண்ணவும் ஏலாது. அதால மழை தொடங்கமுதலே கறண்ட் வயருக்குக் கிட்ட இருக்கிற மரக் கொப்புகளை மின்சாரசபைக்காரர் வந்து வெட்டிப்போட்டு போட்டுவினம். அப்பிடி அவை வெட்டுற மரக்கொப்புகள் அப்பிடியே றோட் சைட்டில கிடக்கும். அந்தந்தக் காணிக் காரர்தான் றோட்டில கிடக்கிற மரக்கொப்புகளை அப்புறப் படுத்துறவை.

இந்தமுறையும் மின்சாரசபைக்காரர் மரக்கொப்புகளை வெட்டுகினம். அப்பிடி நல்லூர் சங்கிலியன் வீதியில இருக்கிற லைபிறரிக் காணியில இருக்கிற மரக்கொப்புகளையும் வெட்டி றோட்டுக்கரையில போட்டிட்டுப் போட்டினம். அந்த மரக்கொப்புகள் நாலைஞ்சு நாளுக்கும் மேலா,றோட்டின்ர அரைவாசிக்குக் கிட்ட மறிச்சுக் கொண்டு வாடி, வதங்கி அப்பிடியே கிடந்திருக்கு. உந்தமரக்கொப்புகளுக்குப் பக்கத்தில தான் பிரதேச செயலகமும் இருக்குது. அங்க வேலைசெய்யிறவை, முனிசிபலில வேலை செய்யிறவையெல்லாம் இந்தப் பாதையைத்தான் கூடப்பாவிக்கிறவை. ஆனால் மரக்கொப்புகள் றோட்டின்ர அரைவாசியை மறைச்சுக்கொண்டு கிடந்ததால, அவையளும் போய்வரக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவை. எண்டாலும் அந்த அரசாங்க உத்தியோகத்தர் ஒருத்தருக்குக்கூட , இப்பிடி றோட்டில கிடக்கிற கொப்புகளை அகற்ற ஏதும் செய்யோணும் எண்டோ, உரியவைக்கு அறிவிச்சு நடவடிக்கை எடுக்கோணும் எண்டோ நினைப்பு வரேலை. ஏதோ அந்தந்த நேரத்துக்கு வேலைக்குப் போய்வந்தால் சரி எண்டிட்டு, எல்லாரும் அவரவர் பாடு.

நாலைஞ்சு நாளுக்கும் கூடவா இப்பிடி மரக்கொப்புகள் றோட்டில போறவைக்கு இடைஞ்சலாக் கிடக்கிறதைப் பார்த்த ஒருத்தர், அதுக்கும் மேலையும் பொறுக்க ஏலாமல் யாழ்ப்பாணம் முனிசிபல் ஒப்பீஸுக்கு போன் பண்ணி விசயத்தைச் சொல்லி இருக்கிறார். ஏனெண்டால், அந்த மரக்கொப்பு கிடக்கிற இடம் முனிசிபல் ஏரியாவுக்குள்ள தான் இருக்குது. மரக்கொப்பை வெட்டின காணியும் முனிசிபல் லைபிறரிக் காணிதான். அப்ப முனிசிபல்காரர் தானே அந்த மரக்கொப்புகளை எடுக்கோணும். ஆனால் இப்பிடி முறைப்பாடு செய்தவருக்கு "ஐயா, றோட்டில கிடக்கிற குப்பையளை எடுக்கிறதுதான் எங்கட வேலை, உப்பிடி மரக்கொப்புகளை எடுக்கிறது எங்கட வேலையில்லை" எண்டு முனிசிபல்காரர் மூஞ்சையில அடிச்ச மாதிரி பதில் சொல்லிப்போட்டு போனை வைச்சிட்டினம். வெட்டிப் போட்ட மரக்கொப்பும் குப்பைதானே? அப்ப றோட்டில கிடக்கிற மரக்கொப்பைத் தூக்கிக்கொண்டு போங்கோ எண்டு வனவளத்திணைக்களத்துக்கோ அறிவிக்க வேணும்? ஒண்டுமே விளங்காமல் கிடக்கு. இதைப்பற்றி அந்தவட்டாரத்துக்குப் பொறுப்பான உறுப்பினரோ, இல்லாட்டி மேயரோ ஏதும் நடவடிக்கை எடுப்பினமோ?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படு வீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளில் நன்றாக சிந்தித்துச் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் தேவைகளைப் பூர்த்திசெய்யும்வகையில் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சுவார்த்தை சாதகமாகமுடியும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் – மனைவிக்கிடையே மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீண்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். விட்டுப் பிடித்துச் செல்லவும்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம் :** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். திடீர்ச்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**மீனம்:** அனுகூலமான நாள். தந்தைவழி உறவினர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். நீண்டநாள்களாக தொடர்பில் இல்லாத நண்பர் ஒருவர் தொடர்புகொண்டு பேசுவது உற்சாகம் தரும்.




# யாழ். மாவட்டத்தில் வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம், ஒக்.20

வடக்கு மாகாண மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சினால் மகளிருக்கான இரண்டாம் கட்ட வாழ்வாதார உதவித்திட்டம் யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் வழங்கிவைக்கப்பட்டது.

மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலக ரீதியாகப் பரிந்துரைசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த உதவித்திட்டம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டு உதவித்திட்டங்களை வழங்கிவைத்தார்கள். (ச-இ)

# நுழைவாயில் திறப்பு

கிளிநொச்சி, ஒக்.20

பளை மத்திய கல்லூரியில் புலம்பெயர் நாடுகளில் வதியும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பழையமாணவர்களால் நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் திறப்பு நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 8மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் கு. இரவீந்திரா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-9)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரும் பனை அபிவிருத்திச் சபையினரும் இணைந்து தென்மராட்சிக் கிழக்கு கெற்பேலி கிராம அலுவலர் பிரிவில் பாடசாலை வீதி கடற்கரைப் பகுதியில் அண்மையில் 4 ஆயிரம் பனம் விதைகளை நடுகைசெய்தனர். (ச-9)



கிளிநொச்சி நகர்ப் பகுதியில் தீபாவளி வியாபாரம் நேற்று களைகட்டியது. மக்கள் அதிகளவில் திரண்டு தமக்கு வேண்டிய பொருள்களை மிகுந்த ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர். (ச-113,40)

# தீபாவளித் திருநாள் சிறப்புப் பூசைகள்

யாழ்ப்பாணம், ஒக்.20

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் விசேட அபிஷேகமும், காலை 8.30 மணியளவில் சிறப்புப் பூஜை வழிபாடுகளும் இடம்பெறும். வசந்த மண்டபப்பூஜைவழிபாடுகளைத்தொடர்ந்து நகுலேஸ்வரப் பெருமான் இடபாரூடராக எழுந்தருளி உலாவருவார் என ஆலய ஆதீனக்கர்த்தா சிவஸ்ரீ ந.ரங்கநாதக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-66)

# முட்டையின் விலை யாழில் சரிவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.20

நாடளாவிய ரீதியில் கடந்த வாரம் முட்டையின் விலை பத்து ரூபாவால்குறைக்கப்பட்டுள்ளபோதிலும் யாழ்.மாவட்டத்தில் இன்னமும் முட்டை விலைகுறைக்கப்படவில்லை என்று நுகர்வோர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

முட்டை விலை குறைப்புக்கமைய வெள்ளை முட்டையொன்று 18 ரூபாவாகவும், சிவப்பு முட்டையொன்று 20 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுமென அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்திருந்தது.

எனினும், யாழ்.மாவட்டத்தில் தற்போது வெள்ளை மற்றும் சிவப்பு முட்டைகள் 28 ரூபாவுக்கும், 35 ரூபாவுக்குமிடையில் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)



# ஜதுஸ்சன் நினைவாக கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.20

கடந்த மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த திலகீஸ்வரன் ஜதுஸ்சனின் 21 ஆவது பிறந்ததினமான நேற்று முன்தினம் அவரது தொழிற்றுறை நண்பர்கள் மற்றும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர் இணைந்து தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை என்பவற்றை வழங்கிவைத்தனர். சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் மயூரன் தலைமையில் சாவகச்சேரி நகராட்சிமன்ற பொன்விழா மண்டப கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஜதுஸ்சனின் தந்தையால் நினைவுச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. (ச-28)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முப்பொன் விழா

யாழ்ப்பாணம், ஒக்.20

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா ஆய்வரங்கத் தொடக்க நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணி தொடக்கம் 11மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன்போது ஆய்வரங்க மலர் வெளியீடு, சிறப்புப் பிரதிகள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

தலைமையுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி, ஆசியுரையை யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை பி.ஜே.ஜெபரட்ணம், இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் பிரம்மஸ்ரீ.கு.வை.கா. வைத்தீஸ்வரக் குருக்கள், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஸ் ஆகியோர் வழங்குவர்.

அன்றையதினம் காலை 11மணி தொடக்கம் பி.ப.1.30மணி வரை ஆய்வரங்கு இடம்பெறும்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் பிரதான வீதி 286, கலைத்தூதுக் கலையகத்தில் பி.ப.4மணி தொடக்கம் பி.ப. 7மணி வரை அரங்க நிகழ்ச்சி இடம்பெறும்.

ஆசியுரையை யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, வாழ்த்துரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்.அமலமரித்தியாகிகள் மாகாண முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக் அமதி ஆகியோர் வழங்குவர். இறுதியாக பரிசளிப்பு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, அபிநயப்பாடல், பேச்சு, நடனம், நடன அளிக்கை என்பன நிகழ்வைச் சிறப்பிக்கும். (ச-41)






## பாதாளக்குழுவுடன் தொடர்பு; 18 பெண்கள் கைது

கொழும்பு, ஒக்.20

இலங்கையில் இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய 18 பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

20 மற்றும் 45 வயதுக்கிடைப்பட்ட பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் வியாபாரம், துப்பாக்கி கடத்தல், கொலைக்கு உளவு பார்த்தல் போன்ற செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-44)

## கந்தசஷ்டி விரதம்

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் கந்தசஷ்டி விரதம் நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 3.30மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதன்போது அபிஷேகம், மூலமூர்த்திப் பூஜை, வசந்தமண்டபப் பூஜை என்பன நடைபெற்று முருகப்பெருமான் திருவீதி வலம் வருவார். தினமும் மாலை 4.30மணிக்கு விஷேட பூஜைகள் இடம்பெறும். எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்திப் பூஜை, வசந்தமண்டபப் பூஜை என்பன நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என்பதனை ஆலயப் பிரதமகுருவும் ஆதீனக் கர்த்தவுமாகிய சிவஸ்ரீ.து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (ச-41)

## சதுர்த்தி விரத உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சதுர்த்தி விரத உற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதன்போது அபிஷேகம், மூலமூர்த்திப்பூஜை, வசந்தமண்டபப் பூஜை என்பன நடைபெற்று விநாயகப்பெருமான், முருகப்பெருமான் ஆகியோர் திருவீதி வலம் வருவார்கள் என ஆலயப் பிரதமகுருவும் ஆதீனக் கர்த்தவுமாகிய சிவஸ்ரீ.து.விவேகானந்தக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## இந்தியாவும், அதன் பொறுப்பும்...!

"40 ஆண்டுகளுக்கு முன்னர், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்காக இந்தியா திறந்துவிட்ட அரசியல்வெளி, ஜனாதிபதி அநுர தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தால் முடக்கப்பட்டுவருகின்றது" என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் இலங்கையின் இராஜதந்திரிகளில் ஒருவரான கலாநிதி தயான் ஜயதிலக. மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எந்தவொரு முறையான - தெளிவான அறிவிப்பையும் வெளியிடாத நிலையிலும், இந்தியாவுடன் நெருக்கம்காட்டி, ஈழத்தமிழர்களுக்கான இந்தியாவின் குரல்களை மழுங்கடிக்கச் செய்யும் நுட்பமான அரசியலைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது என்றும் அவர் நொந்துகொண்டுள்ளார். இலங்கையின் நீண்ட- நெடிய அரசியல் வரலாற்றில், இந்தியாவை அதன் அதீத இராஜதந்திரத் தலையீட்டுக்காக எதிர்த்துவந்த தரப்புத்தான் தற்போதைய அரசாங்கம். அத்துடன், இந்தியாவின் தலையீட்டால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் தேவையற்றது என்றும் தேசிய மக்கள் சக்தியின் பிரதானிகள் பலமுறை அறிவித்துள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் -பின்னணியில்- கலாநிதி தயான் ஜயதிலகவின் கருத்துகள் காத்திரமானவையாக அமைந்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் இந்தியா, மிகவும் ஆழமான பரிசீலனைகளில் ஈடுபடவேண்டியது காலத் தேவையானது. அத்துடன், பிராந்திய வல்லரசாக நிலைபெறுவதற்காகவேனும் கலாநிதி தயான் ஜயதிலக முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு விடைதேடவேண்டிய கட்டாயத்தனம் இந்தியாவுக்கு உண்டு.

13ஆவது திருத்தத்தை தமது தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகக் கொள்வதற்கே தமிழர்கள் தயாரில்லை என்றபோதிலும், 'பறப்பதைப் பிடிப்பதற்காக இருப்பதையும் இழந்த கதையாக ஆகிவிடக்கூடாது' என்பதில் உறுதியாகவுள்ளனர். எனவே, ஜனாதிபதி அநுர அரசின் மீதான பிடியை இந்தியா இறுக்கவேண்டும். இரண்டல்ல, மூன்றல்ல முப்பதுக்கும் மேற்பட்ட வருடங்களாக ஈழத்தமிழர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான எதையும் இந்தியா செய்ததேயில்லை. இவ்வாறிருக்கையில், 13ஆவது திருத்தமும், மாகாணசபைகளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் துடைத்தெறியப்படுமாக இருந்தால், 'பிராந்திய வல்லரசு' என்ற பெயருக்கு இந்தியா தகுதியற்றதாக ஆகும்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினையில் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வைத் திரும்பத் திரும்ப பல்லவி போன்று பாடிக்கொண்டிராமல், தனது கொள்கை நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த இந்தியா முன்வரவேண்டும். 36 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம் தமது கண்முன்னாலே கொழும்பு அரசால் எவ்வாறு கறையான்புற்றுப்போன்று அரிக்கப்பட்டு எதுவுமில்லாது ஆக்கப் பட்டுள்ளது என்பதை உணர்ந்தாவது, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எதுவும் தமிழர்களுக்குத் தீர்வாக அமையாது என்ற யதார்த்தத்தை இந்தியா ஏற்கவேண்டும். சிங்கள தேசம் புறஅழுத்தம் காரணமாக தமிழ் மக்களுக்கு எதை வழங்கினாலும் அதை அந்த அழுத்தம் நீங்கியதும் மீளப்பறித்துக் கொள்ளும் என்பதாலேயே தமிழ் மக்கள் தனிநாடு கேட்டுப் போராடினார்கள். இப்போதும் சிங்கள தேசத்தால் மீளப்பறிக்கமுடியாத அதிகாரத்தைக் கோருவதற்கும் அதுவே காரணம். எனவே இந்தக் களயதார்த்தத்தைப் புரிந்துகொண்டு இந்தியா தன் பொறுப்புணர்ந்து செயலாற்றவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### நாளொரு நல்வார்த்தை

எவன் பணிகிறானோ
அவன் உயர்கிறான்.

– மார்க் –



## தீபாவளிப் பண்டிகைக்காக விசேட பேருந்து சேவைகள்



**கொழும்பு, ஒக்.20**

**நீண்டவார இறுதி விடுமுறை மற்றும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு விசேட பேருந்து சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

அதன்படி ஹற்றன், வெலிமட, பதுளை, பசறை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு மேலதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட பேருந்துகளை அதிகபட்சமாகச் சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை தீபாவளிப் பண்டிகையின் பின்னர் கொழும்புக்குத் திரும்பும் பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக, பயணிகள் தேவை அதிகமாக உள்ள பகுதிகளில் தற்காலிக அனுமதிப்பத்திரங்களின்கீழ் பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்துமாறு மேல் மாகாண போக்குவரத்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (ச-இ)

## பொன்னி அரிசி இறக்குமதிக்கு வர்த்தமானி

கொழும்பு, ஒக்.20

கீரிச் சம்பா அரிசிக்கு மாற்றாகக் கருதப்படும் பொன்னிச் சம்பா அரிசியை இறக்குமதி செய்வதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் கடந்த 15ஆம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இறக்குமதியாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 52 மெற்றித்தொன் அரிசியே இறக்குமதி செய்யமுடியும். (ச-இ)

## ஓட்டோ விபத்து; சிறுவன் பலி!

கொழும்பு, ஒக்.20

முச்சக்கரவண்டி விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என்று வாழைச்சேனைப்ர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி காவத்தமுனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. முச்சக்கரவண்டியில் சிறுவன் பயணித்துக்கொண்டிருக்கும்போது முச்சக்கரவண்டிச் சாரதி நிறுத்திவைக்கப்பட்டிருந்த சிறிய ரக உழவு இயந்திரத்தைக் கடந்து செல்லும்போது முச்சக்கரவண்டியில் இருந்த சிறுவன் சிறிய உழவு இயந்திரத்தில் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## போதைப்பொருள் கடத்தல்; பேருந்துச் சாரதி கைது!

கொழும்பு, ஒக்.20

பேருந்தில் போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் சாரதி உட்பட இருவர் அம்பாறை தலைமையகப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை தலைமையகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ஐஸ் மற்றும் ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் இருவரும் நீண்டகாலமாக பேருந்தில் போதைப்பொருள் கடத்திவந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)



## புலமைப்பரிசில் பரீட்சை மீள்திருத்தப் பெறுபேறு வெளியீடு

கொழும்பு, ஒக்.20

2025 ஓகஸ்ட் 10 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மீள் திருத்தப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ வலைத்தளமான www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk க்குச் சென்று தேர்வு எண்ணை உள்ளிடுவதன் மூலம் முடிவுகளைப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை** செவ்வாய்க்கிழமை - ஐப்பசி 4
21.10.2025
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோஷ நிவாரணமளிக்கும் தீபாவளிப் பண்டிகை

கே.எஸ். சிவஞானராஜா



எம்மைப் பீடித்துள்ள அசுர குணதோஷங்கள் நீங்கவும், தூய நல்ல குணங்கள் ஓங்கவும், நேயம்மிக்க புண்ணியதானங்கள் மலியவும், கல்விச்செல்வம் பொருட்செல்வம் தானியச்செல்வம் பொலியவும், பகைவர்கள் பஞ்சமா பாதகர்கள் திருந்தவும், புதுவாழ்வு வசந்தமாகப் பிரகாசிக்கவும், வருகின்ற ஒரு பேறான பண்டிகையே தீபாவளியாகும். ஒளி தருகின்ற தீபப்பண்டிகை இதுவாகும். தீபம் + ஆவளி. அதாவது தீபங்களின் வரிசை. அன்றைய காலமானது மின்சார வசதியற்ற இருண்ட பொழுதினில் இல்லங்கள் தோறும் எண்ணெய் விளக்குகள் வரிசையாக ஏற்றும்போது உண்டாகும் ஒளிவிளக்கு அழகு கொள்ளை அழகோடு வீடுகளைக் கொலுவேற்றுவதாகவும் அள்ளிக்கொள்ளுமே.

ஐப்பசி மாதத்தில் கிருஷ்ண பட்ச, தேய்பிறை சதுர்த்தசித் தினத்தில் தீபாவளி உலக இந்துமக்களால் கொண்டாடப்படுகிறது. இப் பண்டிகை பல்லாண்டு காலமாக புராண சமய விழுமியங்களோடு சஞ்சலங்களை அழித்தொழிக்கும் ஒரு பண்டிகையாக என்றும் நின்று விளங்குகின்றது.

அசுரர்களும் தேவர்களும் தாம் தாம் பெரியவர்கள் என்ற வேறுபாடு கொண்டதனால் உருவான சண்டை யுத்தகளமாகி ரணகளமாகிறது. இவ்வாறான போரானது அன்றும் நடந்தது. இன்றும் நடக்கிறது. இனியும் நடக்கலாம். ஆணவம் இவ்வுலகத்தில் அறவே நீங்கும் வரை வீட்டுக்குள்ளும் நாட்டுக்குள்ளும் நடந்தே தீரும். எனவே வீட்டுக்குள் தீபாவளி அவசியமானது. வீட்டுக்குள் மனைவி பெரிய பதவியில் இருப்பார். அதேவேளை கணவன் சாதாரண பதவியில் இருப்பார். தகுதி நிலையில் இருவருக்கும் யார் யார் பெரிது என்று மமதைப் போர் எழுந்தே தீரும். வீட்டிலே கணவனே முதல்வன். அலுவலகத்தில் மனைவியே முதல்வி. இருவரையும் சமாதானப் படுத்துவது பண்டிகைகளே. இதன் தாற்பரியம் கருதியது மட்டுமல்லாமல் வயதிலே மூத்தவரும் குடும்பத்தலைவனும் கடின உடல் உழைப்பாளியும், பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவனும் கணவனே ஆவர். இந்தப் புரிதலின் அடிப்படையிலேதான் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி குடும்பங்களைச் சமச்சீராக்குகின்றது.

இந்தத்தீபாவளித்தினமானது இன,மத,மொழி,நிற,குல,பேதங்களைக் கடந்துசகோதர வாஞ்சையை வளர்ப்பதாகக் கொண்டாடப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தளவில் பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் ஏனைய சமயோசித உல்லாசப் பிரயாணிகளும் தீபாவளிப் பண்டிகை இந்துக்களால் கொண்டாடப்படும் வேளையில் தாமும் சகோதர வாஞ்சையோடு ஆதரித்து அனுசரணையாக இருப்பர். மிகவும் சலுகையடிப்படையில் மலிவு விலையில் கடைகள் தோறும் வீதிகள் தோறும் புடைவைகள் அமோக விற்பனையாவது உள்ளங்களை வசீகரிப்பனவாய் வாங்கவும் செய்யும் இரசிக்கவும் தூண்டும். கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும், இருவரும் பிள்ளைகளுக்கும் எல்லோருமே குல தெய்வங்களுக்கும் புத்தாடை புனைந்து சார்த்தி அழபு பார்ப்பார்கள். புத்தாடை அணிந்து வீடும், ஊரும், வீதியும் சிரிக்கும்போது நாடும், நகரமும் தூயபேறடைகிறது. தீபாவளி அனைவருக்கும் இன்பம் பயக்க நாம் இறைவனை உளமாரத் துதிப்போ மாக. அசுரனான நரகாசுரன் தேவர்களைக் கொடுமைப்படுத்தி சொல்லொணாத்துன்பம் விளைவித்தபோது தேவர்கள் மஹா விஷ்ணுவிடம் முறையிட்டபோது துவாரகாபுரியில் கண்ணபிரான் விஷ்ணுவின் அவதாரமாகி ஆட்சிபுரிந்தவராய் துஷ்டர்களையும் அசுர அரக்கர்களையும் அழிக்கத் திருவுளங் கொண்டவராய் மகாவிஷ்ணுவின் ஆணைப்படி நரகாசுரனை அழித்தார். அவன் இறக்கும் தறுவாயில் தான் செய்த மகா தவறினை உணர்ந்து தான் இறந்து இறைவன் திருவடியில் பூத்திருக்கும் நாளை மக்களனைவரும் நிம்மதியுடனான புதுவாழ்வு பெற எல்லோரும் காலை நீராடி புத்தாடை புனைந்து இறைவழிபாடியற்றி புதிய பலகாரங்களோடு உணவருந்தி அயலவர் உறவினர் நண்பர்களுடன் அளவளாவி அவரவர் தாம் தம்மைச் சுயபரிசோதனை செய்து தூய வார்த்தைகளைப் பரிமாறி நீடு வாழத் தீபாவளி எல்லோரையும் புனிதர்களாக்கும்.

பஞ்சமாபாதகங்கள் யாவுமே அசுரத்தனங்களையே கொண்டுவரும் என்பதனால் அவற்றிலிருந்து சம்பந்தப்பட்ட அனைவரும் தீபாவளி முதற்கொண்டு விடுதலை பெறவேண்டும். விடுதலை பெறும்போதுதான் எமது நாட்டுக்குத் தீபாவளி. மூட நம்பிக்கைகளினால் நாம் நொந்துபோயுள்ளோம். அவற்றிலிருந்து நாம் விடுதலை பெறும் நாளே நமக்குத் தீபாவளி. சிறுவர், பெண்கள் எப்போது பாதுகாப்பாக வாழ்கிறார்களே அன்றைய நாளே நமக்குத் தீபாவளி. நிலையற்ற கோடி பணம் தான் சமயம் என்று எண்ணும் மனப்பாங்கிலிருந்து எப்போது விடுதலை பெறுகிறோமோ அப்போதுதான் எமக்குத் தீபாவளியாகும்.

நாம் எமது மனதுக்குள் இருக்கும் ஆணவ அரக்க சுபாவங்களை எப்போது அறவே ஒழிக்கின்றோமோ அன்றைய நாளே எமக்குத் தீபாவளியாகும். மேடையில் இருப்பவர்களின் மனதில் மாற்றம் நிகழ்ந்தால் அதுவே பாமரரான எமக்குத் தீபாவளி.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தின் இருளகற்ற வருக தீபாவளியே

தேசத்தின் இருளகற்று தீபாவளியே
தேடுகின்ற உரிமையைத்தா தீபாவளியே
நாசத்தை ஒழித்துவிடு தீபாவளியே
நமக்கொரு விடிவைத்தா தீபாவளியே

மோகத்தைக் கொன்றுவிடு தீபாவளியே
மோதலை நிறுத்திவிடு தீபாவளியே
ஆபத்தைப் போக்கிவிடு தீபாவளியே
அடிமையை நீக்கிவிடு தீபாவளியே

தீபத்தை ஏற்றிவிடு தீபாவளியே
தீர்வைத் தந்துவிடு தீபாவளியே
பாவத்தைத் தீர்த்துவிடு தீபாவளியே
பாதையைக் காட்டிவிடு தீபாவளியே

சோதனை ஒழித்துவிடு தீபாவளியே
சுதந்திரம் தந்துவிடு தீபாவளியே

**கலா மதுரத்தமிழ் செல்விகள்**



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வருடங்கள் கடந்தபோதும் மீள்குடியமர்த்தப்படவில்லை!

## முள்ளிக்குளம் மக்கள் அந்தரிப்பு

**முல்லைத்தீவு, ஒக்.20**

**கடற்படையினர் மற்றும் வனவளத்திணைக்களத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள முள்ளிக்குளம் கிராமத்தை விடுவிப்புச்செய்து, தமது பூர்வீகக் கிராமத்தில் தம்மை விரைந்து மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று முள்ளிக்குளம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மன்னார் சிலாவத்துறைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள மலைக்காடுக் கிராமத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நடத்திய மக்கள் குறைகேள் சந்திப்பில் அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டினர்.

கடந்த 2007ஆம் ஆண்டு அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது சொந்த இடத்திலிருந்து வெளியேறினோம். சொந்தக் கிராமமான முள்ளிக்குளத்திலிருந்து வெளியேறிய எம்மை இதுவரை மீளக்குடியமர்த்தாமையால் தற்போது மலைக்காடு எனும் கிராமத்திலேயே தங்கவைக்கப்பட்டுள்ளோம். எமது பூர்வீகக் கிராமமான முள்ளிக்குளத்தினைக் கடற்படையினர் மற்றும் வனவளத்திணைக்களத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர்.

தற்போது விவசாயத்திற்கு நீர்ப்பாசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுவரும் புளியங்குளத்தின் நீரேந்துப்பகுதிகள் சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டுவருகின்றன - என்றும் மக்கள் குறிப்பிட்டார்கள்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், முள்ளிக்குளம் கிராமத்தின் மீள்குடியேற்றம் தொடர்பாக தம்மால் தொடர்ந்தும் கவனஞ்செலுத்தப்படுமெனவும் தெரிவித்தார். (ச-246,26)

யாழ்.மாவட்டத் தொழில் திணைக்களத்தின் உதவித் தொழில் ஆணையாளராகத் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா கடந்த வியாழக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். இவர் கொழும்பு தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளர் இரேஷா உதயங்கனியிடமிருந்து நியமனக்கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். (ச-25,66)



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ். ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் திருமதி சந்திரலதா கனேந்திரன் தலைமையில் சௌந்தரநாயகம் ஆனந்தராணி ஞாபகார்த்த திறந்தவெளி அரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் புலேந்தி ராசா அபிநயனுக்கு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் ஊடாகப் புதிய துவிச்சக்கர வண்டியொன்று வழங்கி வைக்கப்பட்டது. (எ-41-66)



ஜே/128 கொக்குவில் மத்தி மேற்கு கிராம அலுவலர் பிரிவின் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளுடன் இணைந்து கொக்குவில் முதலி விளையாட்டுக் கழகம், "எதிர்காலம் எமக்கானது எதிர்கொள்ள எழுந்திடு " எனும் தொனிப்பொருளில் சிறுவர் முதியோர்தின நிகழ்வினை மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் அண்மையில் நடத்தியது. (ச)





### வெள்ளைப்பிரம்பு தினத்தில்

## விழிப்புலனற்றோரால் விழிப்புணர்வுப் பேரணி

யாழ்ப்பாணம், ஒக்.20

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தினை முன்னிட்டு யாழ்.நல்லூர்ப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாற்றுவலுவுடையோர் சுய உதவிக்குழுவின் ஏற்பாட்டில் விழிப்புலனற்றவர்களால் விழிப்புணர்வுப் பேரணி நல்லூர் ஆலய முன்றலில் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

"விழியின் இழப்பு வாழ்வின் இழப்பல்ல", "அனுதாபங்களை விட்டு அன்பால் விழிப்புலனற்றவர்களை அரவணைப்போ", "வெள்ளைப்பிரம்பு தினத்தில் மனிதர்களுக்கும் கைகொடுப்போம்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கிய வண்ணம் விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது. (ச-25, 20)



## விதைப் பந்துகள் வீசல் அக்கராயனில் நிகழ்வு!

வருடாந்த விதைப்பந்துத் திருவிழாவின் இறுதி நாளை முன்னிட்டு அக்கராயன் பிரதேசத்தில் ஒதுக்கப்பட்ட காட்டில் கடந்த வியாழக்கிழமை விதைப்பந்துகள் வீசப்பட்டன. ஓராயம் அமைப்பின் அனுசரணையுடன் விவேகானந்த வித்தியாலயத்தினால் இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதன்போது ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட விதைப்பந்துகள் அக்கராயன் காட்டுக்குள் வீசப்பட்டன.

இந்தச் செயற்பாட்டில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அகமட், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் சி. லதீஸ்குமார், வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மாவட்ட அதிகாரி மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வன விரிவாக்க உத்தியோகத்தர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் ஆசிரியர் மரணம்

வவுனியா, ஒக்.20

பதவியா - ஹெப்பிட்டிப்பொலாவ பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் வவுனியாவில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரு ஆசிரியர்கள் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பதவியா பகுதியில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றுக்கு ஆசிரியர்கள் காரில் சென்று விட்டு திரும்பியபோது, பதவியா - ஹெப்பிட்டிக்கொலாவ வீதியில் உள்ள மகாநெட்டியாவ பகுதியில் எதிரே வந்த பிக்கப் ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்தில் வவுனியா மடுக்கந்த ஸ்ரீ தம்மரத்ன வித்தியாதன பிரிவேன ஆசிரியரான சஞ்சீவா என்பவரே உயிரிழந்தவராவார். மேலும் இரு ஆசிரியர்கள் காயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் ஹெப்பிட்டிப்பொலாவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-எ-இ)

**வீடுடன் காணி விற்பனைக்கு உண்டு**

**வட்டு கோட்டை சங்காரத்தை சந்தியில் இருந்து 100m நல்ல சூழலில் 3/4 பரப்பி நல்ல தன்னி கிணறுடன் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு. வசிப்பிடம் மற்றும் வர்த்தக நேக்கத்திற்கு ஏற்ற இடம்**

தொடர்புகளுக்கு:
076 023 3301, 076 023 3301

3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01.03.1941 — உதிர்வு 23.10.2022



அமரர் அப்பாக்குட்டி சண்முகலிங்கம்
திதி: வளர்பிறை சதுர்த்தசி

ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சத்தில் ஆழமாய்
வாழ்ந்து கொண்டே இருக்கும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

என்றும் நீங்காத
நினைவுடன்
குடும்பத்தினர்.

## உடுப்பிட்டி...

வடமராட்சியில் நேற்று நடைபெற்ற வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின் போதான இழப்புகளுக்கான இழப்பீட்டு அறிக்கை வெளியீட்டு நிகழ்விலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளதாவது:-

வல்வைப் படுகொலையுடன் நேரடியாக இந்தியப் படைகள் தொடர்புபட்டிருந்தாலும் இலங்கை அரசாங்கத்துக்கே அது தொடர்பான பொறுப்புள்ளது. கொழும்பில் உள்ள இழப்பீட்டு அலுவலகத்துக்கு வல்வைப் படுகொலை இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கையின் சிங்கள, ஆங்கிலப் பிரதிகள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டதுடன், நேரிலும் கையளிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் இழப்பீட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வல்வைப் படுகொலையில் வலுவான சாட்சியமாக நான் இருக்கிறேன். இந்திய அமைதிகாக்கும் படையினரால் 1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை சம்பவத்தின் போது வல்வைப் பிரஜைகள் குழுவின் செயலாளராக இருந்த என்னை கைது செய்து உடுவில் மகளிர் கல்லூரியில் செயற்பட்ட அவர்களது முகாமுக்குக் கொண்டு சென்று மூர்க்கத்தனமாக தாக்கி சித்திரவதை செய்தனர். அன்று என்னுடன் மேலும் பத்து சிறுவர்களும் கைது செய்யப்பட்டு அங்கு கொண்டுவரப்பட்டிருந்தனர். அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த போது அங்கிருந்த இந்தியப் படை அதிகாரி ஒருவர் ஒரு கடிதத்தை கொண்டு வந்து அதில் கையொப்பம் இட வேண்டும் எனக் கேட்டார். என்னுடன் கைது செய்யப்பட்ட பத்து சிறுவர்களும் இந்த முகாமில் இருந்து தப்பி ஓடிவிட்டனர் என்று பிரஜைகள் குழு செயலாளர் என்ற அடிப்படையில் அதனை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தார்.

நான் அதை மறுத்தேன். இரவிரவாக அவர்கள் கத்தி குளறும் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் அந்த அலறல் சத்தங்கள் ஓய்ந்து போயிருந்தன. இறுக்கமான கட்டுக்காவலை மீறி அவர்களால் தப்பித்து செல்வது இயலாத ஒன்று. அவ்வாறு இருந்தபோது நான் பொய்யான கடிதத்தில் கையொப்பம் இடமாட்டேன் என கூறி மறுத்தேன். அப்படி என்றால் நீங்களும் இங்கிருந்து வெளியேற முடியாது என அச்சுறுத்தினர். மூன்றாவது நாள் அங்கு வந்த பிரிகேடியர் சமீர என்னை அடையாளம் கண்டு விடுவிக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

அந்த பத்து இளைஞர்களும் சித்திரவதைகளுக்கு பின்னர் படுகொலை செய்யப்பட்டு இந்திய அமைதிகாக்கும் படையினரது முகாமாக இருந்த உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலேயே புதைக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் நேரடி கண்கண்ட சாட்சியாக நான் இருக்கிறேன். பலர் அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் உள்ளது. நவீன ஸ்கான் இயந்திரங்கள் மூலம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வளாகத்தை ஆய்வு செய்து புதைகுழி இருக்கும் இடத்தை உறுதிப்படுத்தி அகழ்வு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

(அ-எ-100)

## இலங்கையில்...

இந்த ஆவணங்கள் அனைத்தும் மிகப் பாதுகாப்பான டிஜிட்டல் ஆதாரத் திரட்சிக் கட்டமைப்பின் ஊடாகப் பேணப்படுகின்றன என்றும், அவற்றில் மீறல்களுக்கான பொறுப்பாளிகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன என்றும் இலங்கைப் பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2021ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் 'இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டம்' எனும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டத்தின் ஓரங்கமாக இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மற்றும் மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு, உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழான வழக்குத்தொடரல் தேவைப்பாடுகளுக்காக பாதுகாப்பாக சேமிக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தின் ஊடாகவே ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 348 ஆவணங்கள் திரட்டப்பட்டுள்ளன. அவற்றில் 78 ஆயிரத்து 151 ஆவணங்கள் இலங்கை தொடர்பான ஐ.நா.வின் முன்னைய விசாரணை அறிக்கைகளில் இருந்தும், 34 ஆயிரத்து197 ஆவணங்கள் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தாலும் திரட்டப்பட்டுள்ளன.

சட்டவிரோதப் படுகொலைகள் தொடர்பாக 37 ஆயிரத்து 905 ஆவணங்களும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக 48 ஆயிரத்து 70 ஆவணங்களும், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான மீறல்கள் தொடர்பாக 32 ஆயிரத்து 99 ஆவணங்களும், சிறுவர்களுக்கு எதிரான மிகப் பாரதூரமான மீறல்கள் தொடர்பாக 9 ஆயிரத்து 163 ஆவணங்களும், சித்திரவதைகள் தொடர்பாக 26 ஆயிரத்து 186 ஆவணங்களும் திரட்டப்பட்டுள்ளன.

(அ-எ-இ)



வேலணை - பெருங்குளம்
முத்துமாரி அம்மன் கோவில்
பரிபாலன சபை
பதிவு இல HA.5/JA/589

**விசேட பொதுக்கூட்டம்**

தலைவர் : திரு.சு.சுந்தரலிங்கம் அவர்கள்
இடம் : ஆலய மண்டபம்
காலம் : 25.10.2025 சனிக்கிழமை, காலை 10.00 மணி
விடயம் : 01.04.2022 - 31.05.2024 காலத்தின் ஆலய புனர்நிர்மாண திருப்பணி பெறுவனவு கொடுப்பனவு கணக்கின் பட்டயக் கணக்காளரின் (22.09.202 ஆந் திகதி) கணக்கறிக்கை சம்பந்தமானது.

பொதுசபை உறுப்பினர்கள், பரிபாலனசபை உறுப்பினர்கள், ஆலய நலன் விரும்பிகள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்
ஆலய பரிபாலன சபையினர்
வேலணை பெருங்குளம்
முத்துமாரி அம்மன் கோவில்

(CS 59685) E

## எரிபொருள்...

துள்ளனர். இவர்களில் 13 பேர் கடந்த மார்ச் மாதம் முதலும், 16 பேர் ஏப்ரல் மாதத்திலிருந்தும், மீதமுள்ளவர்கள் மே, ஜூன், ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களிலிருந்தும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்துமாறு கோரியுள்ளனர்.

அமைச்சர்கள் ராமலிங்கம் சந்திரசேகர், வசந்த சமரசிங்க, அனில் ஜெயந்த, தம்மிக்க படபெந்தி, நாமல் கருணாரத்ன மற்றும் உபாலி சமரசிங்க ஆகியோர் கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து எரிபொருள் கொடுப்பனவு தேவையில்லை என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அவர்களின் எழுத்துபூர்வ கோரிக்கைகளின்படி அவர்களின் பெயரில் உள்ள வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என்று நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான தூரத்தின் அடிப்படையில் எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதத்துக்கு 419.76 லீற்றர் டீசல் வழங்கப்படுகிறது.

(அ-எ-இ)

## நாளை...

கூறியுள்ளது. இலங்கையின் தென்கிழக்கே ஏற்பட்டுள்ள குறைந்த அழுத்தப் பகுதியால் நாட்டின் பெரும்பாலான இடங்களில் மழையுடனான காலநிலை நிலவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இலங்கைகக்கு நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தாவிட்டாலும், மழை நிலைமையை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மழை காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. சீரற்ற வானிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடாவில் நடைபெற்ற நிமலராஜன் நினைவேந்தல்


கொழும்பு, ஒக்.20
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கனடாவில் முன்னெடுக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் நிமலராஜனின் மகள்களும், படுகொலை செய்யப்பட்ட தராகி சிவராமின் மகளும் கலந்துகொண்டனர்.
2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது வீட்டுக்குள் புகுந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் நிமலராஜன் உயிரிழந்தார். (எ-இ)

# மரநடுகைக்கான காணியில் சட்டவிரோத மணல் அகழ்வு!

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுப் பகுதியில் மரநடுகைத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகின்றது என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
“2017ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தால் இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்கான நிரந்தர மரநடுகைத் திட்டத்தைச்செயற்படுத்துவதற்கு 10 ஏக்கருக்கும் அதிகமான காணி வழங்கப்பட்டது.
இந்தக்காணியில் தற்போது சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதால் எமது சுற்றுச்சூழல் பெரிதும் பாதிப்படைகின்றது.
குறித்த விடயம் தொடர்பான தகவல்களை வெளிப்படையாகத் தெரிவித்தால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படு கின்றது.
ஆகவே இந்த விடயம் தொடர்பில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-40,66)

# வவுனியாவில் கைப்பற்றப்பட்ட பெருந்தொகை போதைமாத்திரை

வவுனியா, ஒக்.20
வவுனியா, கண்டிவீதியில் நேற்று இரவு பெருந்தொகை போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. 3 இலட்சத்து 59 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.
இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-110)



**காணி விற்பனைக்கு**



பளை நகரில்
புலோப்பளையில்
உள்ள
காணியொன்றும்
வயல்காணியும்
விற்பனைக்கு உண்டு.

**076 564 7848**

**திருநெல்வேலி காணி விற்பனைக்கு**
பரப்பு - 02, 2 1/2, 01
மக்கள் வங்கி - 100 மீற்றர்
பலாலி வீதி - 75 மீற்றர்
தொடர்புகளுக்கு:-
**077 253 2575**

**பணியாளர் தேவை**
பிள்ளை பராமரிப்பிற்கும், சமையல் வேலைக்கும் வீட்டுடன் தங்கிநின்று வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு
அரியாலை **077 925 1728**

## வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம் (வ.து)
## திருமுறிகண்டி பதிவு இல :- K/177
## பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பபடிவத்தினை 21.10.2025 தொடக்கம் - 10.11.2025 வரை சங்க வேலை நாட்களில் தலைமை காரியாலயம் எரிபொருள் நிலையம் திருமுறிகண்டி எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

1. பதவி :- கணக்காளர்
2. சம்பள குறியீட்டு இலக்கம் :- 104/09
3. சம்பள அளவுத்திட்டம் :- 35200-640x10-700x10-860x10-57200
422400-7680x10-8400x10-10320x10-448800
4. வெற்றிடங்கள் :- 01
5. தகைமைகள் :-

அ. கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்ட பதவியில் கணக்காளர் / உள்ளக் கணக்காய்வாளர் / கணக்குபதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு காலஅனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் / உள்ளக கணக்காய்வாளர் கணக்குபதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆக்க் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ. இலங்கை தொழில்நுட்ப கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா / இதற்கு சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

**அல்லது**

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் /கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வுதுறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். /


க.பொ.த.உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம். / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

### 6. ஏனைய விபரங்கள்

1. வயதெல்லை 18-45 (சங்க பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருந்தாது)
2. விண்ணப்ப முடிவு திகதி - 10.11.2025
3. இப்பதவிக்குரிய அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
4. குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பத்தாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
5. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி கல்வித் தகமை சான்றிதழ். சேவை தகைமை சான்றிதழ். வதிவிட உறுதிப்படுத்தல் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து தலைவர் வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் எரிபொருள் நிரப்பு நிலையம் திருமுறிகண்டி எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவு தபால் மூலமாகவோ 10.11.2025ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். ஏற்கனவே கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

தகவல் : கோ.கஜேந்திரசிங்கம்
தலைவர்
வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உ.கூ.சங்கம்
திருமுறிகண்டி.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.01.1933
மறைவு 20.10.2022

**திதி: 14.11.2025**

**திரு.வைத்திலிங்கம் சோமசுந்தரம்**
Kokuvil West
Mudhali Kovil Trustee
Building Department Colombo,
Sambasivam &Co.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபடச்...

முருகேசு கணேசலிங்கம் (வயது-81) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று மதியம் ஆலயத்துக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் வீடு திரும்பவில்லை. அவர் அங்கு உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-எ-26)

## சோமரத்னவின்...

லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவால் வழங்கப்பட்ட சத்தியக்கடதாசி இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் அதிகாரிகளிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டுத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, அந்தப் படுகொலை தொடர்பாவும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பாகவும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இந்த விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி ஊடாக கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இழைத்த குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், மனிதப்புதைகுழிகள் மற்றும் அவற்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் உள்ளிட்ட சகல உண்மைகளையும் வெளிப்படுத்துவதற்குத் தயார் எனவும் சோமரத்ன ராஜபக்ச அறிவித்திருந்தார்.

இந்த விடயங்களுடன் தொடர்புடைய சில உண்மைகளையும், எதிர்வருங்காலங்களில் சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக உள்ள விடயங்களையும் உள்ளடக்கி கடந்த 4 ஆம் திகதி சோமரத்ன ராஜபக்ச அவரது சட்டத்தரணி முன்னிலையில் சத்தியக்கடதாசியும் வழங்கியிருந்தார்.

அதன் ஒரு பிரதி கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் கையளிக்கப்பட்டது. மற்றொரு பிரதி கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் இயங்கி வரும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் அதிகாரிகளிடமும் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## வல்வெட்டித்துறைப்...

ரூபாவை இழப்பீடாக வழங்கவேண்டும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பரிந்துரைத்துள்ளது.

உயிர் இழப்புக்கான இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதற்கு, இலங்கை அரசாங்கத்தால் 2022ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முடிவை உதாரணமாகப் பின்பற்றி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் உயிர் இழப்புக்கு 10 மில்லியன் இலங்கை ரூபாவை இழப்பீடாக வழங்கியதன் அடிப்படையில் வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின்போது கொல்லப்பட்ட 66 பேருக்கும் 29.75 மில்லியன் ரூபா இழப்பீடாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காயமடைந்த 36 பேருக்கான இழப்பீடாக 1.38 மில்லியன் ரூபாவும், அழிக்கப்பட்ட சொத்துகளுக்கான இழப்பீடாக 57.59 மில்லியன் ரூபாவுமாக மொத்தமாக 88.72 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொகைக்கு 1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதல் 2025ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலத்துக்கான வட்டியாக 4.43 பில்லியன் ரூபாவைச் சேர்த்து 4.5 பில்லியன் ரூபா தொகையை இழப்பீடாக வழங்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பால் தயாரிக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின்போது நிகழ்ந்த இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கை நேற்று வடமராட்சியில் வெளியிடப்பட்டது. வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுச் செயலாளர் ந.அனந்தராஜ் அந்த அறிக்கையை வெளியிட்டார். கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்களின் அறிக்கையின் நூல் வெளியீட்டு நிகழ்வும் நடைபெற்றது. வல்வெட்டித்துறை படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு நிகழ்வில் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ-எ-100-27)

## இஷாராவுடன்...

உள்ளூர் மற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்பாகப் பல்வேறு தகவல்கள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இஷ்ரா செவ்வந்தி பயன்படுத்திய கைபேசி மீட்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில், இஷாரா செவ்வந்திக்குத் தங்குமிட வசதிகளை வழங்கிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே கைது செய்யப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிளின் மாமி முறையானர் என்று கூறப்படுகின்றது.

மத்துகமவைச்சேர்ந்த இந்தப்பெண்ணை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சந்தேகநபரான பெண், சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினால் கொழும்பு நீதிவானிடம் முற்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சபாநாயகர்...

முடிவெடுக்கப்படவுள்ளது. ஒக்ரோபர் மாதத்துக்குரிய 2ஆவது வார நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாகின்றது. இந்த வாரத்தில் நாடாளுமன்ற வளாகத்தில் முக்கியமான கூட்டங்களும் இடம்பெறவுள்ளன.

இந்தநிலையில் சபாநாயகருக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையின் வரைவு நகல் அன்றையதினம் கட்சி தலைவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அவர்களின் இணக்கப்பாட்டுக்குப் பின்னர் பிரேரணை இறுதிப்படுத்தப்படும்.

பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்திருந்தார். இந்தவிடயத்தை பிரதான காரணமாகக்கொண்டே சபாநாயகருக்கு எதிராகநம்பிக்கையில்லாப்பிரேரணையை கொண்டுவருவதற்குரிய ஏற்பாட்டை ஐக்கிய மக்கள் சக்தி செய்திருந்தது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிபெற வைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலம் எதிரணி வசம் இல்லை. இருந்தாலும் சபாநாயகர்மீது எதிரணிக்கு நம்பிக்கை இல்லை என்பது இதன்மூலம் எடுத்துரைக்கப்படும் என எதிரணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ-எ-44)

## போதை...

யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 20 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், சந்தேகநபர்கள் 17 மற்றும் 18 வயதுகளை உடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## சங்கிலியன்...

கின்றது என்றும், அதற்குப் பின்னால் மறைகரங்கள் உள்ளன என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் வடமாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் , வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கு கடிதம் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியின் கிழக்குப் புறமாக அமைந்துள்ளதே "நல்லூர் சங்கிலியன் பூங்கா". 1989ஆம் ஆண்டுவரை செம்மணி வீதி என்பது அதற்கு வடக்காக அமைந்துள்ள தேவாலயத்துக்கு எதிராக பருத்தித்துறை வீதி வரையானதாக இருந்தது. இதற்குத் தெற்காகவும், பருத்தித்துறை வீதிக்கு கிழக்காகவும் முத்திரைச் சந்தையும், மாநகரசபையால் வாடகைக்கு கொடுக்கப்பட்ட கடைகளும் இருந்தன.

1989ஆம் ஆண்டு பருத்தித்துறை வீதியில் இருந்து தேவாலயத்துக்கு நேராகச் சென்ற செம்மணி வீதியின் பகுதி தெற்குப் பக்கமாக இருந்த தனியார் காணிகளை தெற்கு எல்லையாகக் கொண்டு தற்போதுள்ளபடி செம்மணி வீதி மாற்றப்பட்டு, நேரான வீதியாக அமைக்கப்பட்டது. இதனால் இந்த செம்மணி வீதியின் வடக்காக செட்டியார் தோட்டம் என்று அழைக்கப்படும் காணியை வடக்கு எல்லையாகக் கொண்ட காணியாக ஒன்றிணைக்கப்பட்டது. இந்த முழுக் காணியும் மாநகரசபையின் ஆட்சியின் கீழ் இருந்து வருவது வரலாறு.

வெளிநிலமான முத்திரைச் சந்தைப் பகுதியில் மன்னன் சங்கிலியனின் பெயர் நீண்டு நிற்க வேண்டும் என்ற எண்ணத்தின்படியே, செம்மணி வீதியை இடம் மாற்றி முழுப் பகுதியையும் ஒன்றியைத்து "சங்கிலியன் பூங்கா" 1989ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அது மாநகர நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிறது.

இந்த நிலையில் நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் இந்த நிலம் மாநகர சபைக்கு உரித்தானது அல்ல என்ற தோரணையிலும், அது அரச காணி என்ற தோரணையிலும் இங்கு நல்லூர் பிரதேச செயலகம் அமைப் பதற்கு அனுமதிகோரி தங்களுக்கு சமர்ப்பித்த கோரிக்கையின் பேரில் கலந்துரையாடல் கடந்தவாரம் நடைபெற்றது என்று ஊடகச் செய்தி மூலம் அறிய வந்தது. இது மிகுந்த அதிர்ச்சியை தந்தது.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தால் வழங்கப்பட்ட குத்தகை 25 அல்லது 30 வருடம் என்றும் ஏற்கனவே அதில் 15 அல்லது 20 வருடங்கள் சென்றுவிட்டது என்றும், நல்லூர் கோவில் நிர்வாகம் கால நீடிப்புக்கு மறுப்பு தெரிவித்துள்ளது என்றும் இந்த கூட்டத்தில் தெரி விக்கப்பட்டதாக தெரிய வந்தது. இவை முழுவதுமே உண்மைக்குப் புறம்பானவை.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அதன் கட்டடம் அமைந்துள்ள 10 பரப்பு காணியை மாநகர சபையின் குத்தகையில் இருந்து நீக்கி 01.05.2005 ஆம் திகதியில் இருந்து 50 வருடக் குத்தகையை நீதிமன்ற அனுமதியை பெற்று பெற்றுக்கொடுத்ததே நான்தான். அதில் சாட்சியாக நானே ஒப்பமிட்டிருப்பதையும் காணலாம். குத்தகைக் காலம் இன்னும் 30 வருடங்கள் இருக்கையிலும், குத்தகை முடிவுக் காலத்தில் அதை நீடிப்பதற்கான ஏற்பாடு உடன்படிக்கையிலேயே உள்ளடக்கப்பட்டு இருக்கையிலும், சங்கிலிய மன்னனின் பெயரில் அமைந்த பூங்காவை இல்லாமல் அழிக்கும் நோக்கில் இந்தக் காணியை தமக்கு வழங்கவேண்டும் என்று கோரும் நோக்கம் புரிந்து கொள்ள முடியாததும், ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும். இதன் பின்னணியில் ஏதாவது மறைகரங்கள் இருக்கிறதா என்ற சந்தேகம் எழுவதும் இயல்பானதே.

இதில் எனக்குள்ள மிகப் பெரிய ஆச்சரியம் மாநகரசபை நிர்வாகமும் தெளிவற்று குழம்பியிருந்தமையாகும். கடந்த 13ஆம் திகதி அவர்களுடன் கலந்துரையாடி முழு வரலாற்று விவரங்களையும் நான் தெளிவுபடுத்தியதன் அடிப்படையில் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக தமது ஆட்சி உரித்தில் இருந்த இந்தக் காணியைச் சுற்றி சுற்றுமதில் அமைத்து பூங்காவை மேம்படுத்த யாழ். மாநகர சபை கடந்த14ஆம் திகதி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தநிலை மேலும் தொங்கு நிலையில் தொடராமல் இருப்பதற்கான பொருத்தமான நடவடிக்கையை எடுத்து இந்த தமிழின அரசாட்சியின் சின்னமாக "நல்லூர் சங்கிலியன் பூங்கா" எனும் பெயரில் எம்மின வரலாற்றை வெளிப்படுத்திக் கொண்டு தொடர்வதற்கான திடமான நிலையை ஏற்படுத்தி உதவ வேண்டும் என்று அன்புடன் கோருகின்றோம் - என்றுள்ளது. (அ-எ-26)

## வீட்டிலிருந்து...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார். திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் வசிந்து வந்த பொ.கமலநாதன் (வயது-62) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தனிமையில் வாழ்ந்து வந்தவர் என்றும் நேற்றுக் காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிகொடுக்கும் தீபத்திருநாளில் தீமை அகன்று நன்மை பெருகட்டும்

## உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் வாழ்த்து

இருளை விலக்கி ஒளி கொடுக்கும் தீபாவளித் திருநாளில் அனைவரது வாழ்விலும் வளமும், நலமும் பெருகட்டும் என்று வாழ்த்தியுள்ளார் உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன்.

தீபாவளித் திருநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-



தீபாவளித் திருநாள் இருளை நீக்கி ஒளியை ஏற்றிடும் நாளாகவும், தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும் நாளாகவும் அமைகின்றது. இந்த நன்னாளில் அன்பும், அமைதியும் நிலைக்கட்டும், வேற்றுமை அகன்று ஒன்றுமை ஓங்கட்டும்.

தமிழர்கள் வாழ்வில் துயரங்கள் நீங்கி, மகிழ்ச்சி ஒளி பரவட்டும்.

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (எ-இ)

# சமூகத்தில் இருள் அகன்று நம்பிக்கை ஒளி வீசட்டும்!

## வடக்கு ஆளுநர் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஒக்.20

நம் மனத்திலிருந்தும், சமூகத்திலிருந்தும் இருளை அகற்றி ஒளியைப் பரப்பும் நன்னாள் தீபாவளித் திருநாளாகும். இந்த இனிய நாளில் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நம்பிக்கையும், சந்தோஷமும் ஒளி வீசட்டுமென வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

தீபாவளித் திருநாளை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

ஒளியின் திருநாளாகிய தீபாவளி இருளை அகற்றி ஒளியைப் பரப்பும் நல்வழியைக் குறிக்கின்றது. தீமையை வீழ்த்தி நன்மை வெற்றி பெறும் நினைவூட்டலாகவும், அன்பு, ஒற்றுமை மற்றும் அமைதி நிலவும் சமூகத்தை உருவாக்கும் ஊக்கமாகவும் இந்தப் பண்டிகை விளங்குகிறது. வடக்கு மாகாண மக்களுக்கு நான் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நாளின் ஒளி அனைவரின் இதயங்களிலும் நல்வாழ்வையும், செழிப்பையும் நிரப்பட்டும். இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்! - என்றுள்ளது. (ச-66)

# இல்லாதோருக்கு இரங்கி தீபாவளியைக் கொண்டாடுவோம்

தீப+ஆவளி தீபாவளி ஆகிறது. ஆவளி என்றால் வரிசை என்று பொருள்படுகிறது. தீபங்களை வரிசையாக ஏற்றுதல் என்பதாகும். எதற்காக இவ்வாறு தீபங்களை வரிசையாக ஏற்றவேண்டும் என்ற கேள்வி இதற்குள் மறைந்திருக்கிறது.

பூமாதேவியின் மகனான நரகாசுரன் தேவர்களையும் அசுரர்களையும் சிறைப்பிடித்து துன்பப்படுத்தி வந்தான். இதனால் மனம் வருந்திய தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார்கள். மகாவிஷ்ணு சத்தியபாமாவுடன் சேர்ந்து நரகாசுரனுடன் போர் தொடுத்தார். கோபமடைந்த நரகாசுரன் மகாவிஷ்ணுவைத் தாக்கினான். மகாவிஷ்ணு இறந்தவர்போல கீழே விழுந்தார். இதைப் பார்த்த சத்தியபாமா கோபமடைந்து நரகாசுரனோடு போர் தொடுத்து நரகாசுரனைக் கொன்று வீழ்த்துகின்றாள்.

அந்தநேரத்தில் சத்தியபாமாவுக்கு தனது மகன்தான் நரகாசுரன் என்பது தெரிந்திருக்கவில்லை. நரகாசுரன் சத்தியபாமாவிடம் தான் இறந்த நாளை ஆண்டுதோறும் மக்கள் புனித நீரில் நீராடி புத்தாடை அணிந்து தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடுவதோடு இனிப்புப் பண்டங்களை அனைவரும் உண்டு மகிழவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அதற்கு இணங்கிய சத்தியபாமா அந்த வரத்தை அவனுக்குக் கொடுத்து விடுகின்றாள். இந்த இதிகாசக் கதையை வைத்தே தீபாவளித் தினத்தை ஆண்டுதோறும் கொண்டாடிவருகின்றோம். மற்றும் இராமபிரான் விஜயதசமியன்று இராவணனை வதம் செய்துவிட்டு அயோத்திக்குத் திரும்பிய நாளும் இந்நாளே. மாவலிச் சக்கரவர்த்தி ஆட்சிப்பீடம் ஏறியதும் இந்த நாளே. இவ்வாறு பல்வேறு நிகழ்வுகள் தீபாவளியோடு தொடர்புபட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆகையால் இந்த நாளிலே நாங்கள் அனைவரும் புனித நீராடி தீபங்களை ஏற்றி இனிப்புப் பண்டங்களை உற்றார் உறவினரோடு உண்டு மகிழ்வதோடு ஆதரவற்றவர்கள், முதியவர்கள், அங்கவீனர்கள் போன்றோர்க்கு எம்மாலியன்ற உதவிகளைச் செய்து மகிழ்வோமாக. கடந்த காலத்தில் ஏற்பட்ட துன்பங்கள் முடிவுக்கு வந்து ஒளிமயமான எதிர்காலம் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்று ஆடல் வல்லானைப் பிரார்த்தித்து இந்துசமயப் பேரவையின் தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஈசான சிவசக்திகிரீவன்**
**இந்துசமயப் பேரவையின் தலைவர்**

# சிறுவர்தின நிகழ்வு

மன்னார், ஒக்.20

மன்னார் பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஏற்பாட்டில் சிறுவர்தின நிகழ்வு வங்கிக் கட்டடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக உதவி மாவட்ட முகாமையாளர், மன்னார்க் கிளை முகாமையாளர், வங்கி வாடிக்கையாளர்களின் பிள்ளைகள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது சிறுவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டதோடு குறித்த சிறுவர்களுக்கான புதிய வங்கிக் கணக்குகளும் திறந்து வைக்கப்பட்டன. (ச-41-56)



## தீபாவளியை முன்னிட்டு

# முற்றவெளிக் கடைகளில் இரவிரவாக மக்கள் அலை

## திருட்டுகளும் இடம்பெற்றன

யாழ்ப்பாணம், ஒக். 20

தீபாவளிப் பண்டியை முன்னிட்டு, யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள, விசேட கடைத் தொகுதிகளில் நேற்று இரவிரவாக மக்கள் அலை மோதினார்கள்.

கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் பெய்த தொடர் மழைக்குப் பின்னர், நேற்று மாலையே சற்றுச் சீரான காலநிலை நிலவியது. இதையடுத்தே, தீபாவளிக்குத் தேவையான பொருள்கள் மற்றும் உடைகளை வாங்குவதற்காக மக்கள் அலைமோதுவதைக் காணமுடிந்தது.

பொதுமக்கள் சிலரின் சைக்கிள்கள் திருடப்பட்ட நிலையில், அது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (ம-17)

# தீபாவளிக் கொண்டாட்டம்

தொல்புரம் மத்திய சனசமூக மற்றும் சிவயோக சிறுவர் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் தீபாவளிக் கொண்டாட்டம், நிலையத் தலைவர் கந்தசாமி சதீர்சன் தலைமையில் நிலைய முன்றலில் இன்று திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன், சிறப்பு விருந்தினர்களாக ஜே/169 கிராம சேவகர் திருமதி தீசன் கோபிகா, ஜே/169 சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி மகாலிங்கம் முத்துலட்சுமி, திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹர்ஜனா ரவிச்சந்திரன், தொல்புரம் சக்தி இலவசக் கல்வித் தலைமை நிர்வாகி திருமதி சுகந்தன் குகாயினி, கலாலய நாடக மன்றத் தலைவர் செல்லையா உதயச்சந்திரன், சமூக ஆர்வலர் செல்வராசா கிருஸ்ணதாசன், தொல்புரம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத் தலைவர் கிருஸ்ணசாமி ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-41)

**வீடு வாடகைக்கு**

இராமநாதன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 076 882 8694
077 411 8851

**கடை வாடகைக்கு உண்டு**

மானிப்பாய் வீதி, ஆலடி சந்தியில் கடை தொகுதி வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 411 8851
077 505 8561

**வேலையாள் தேவை**

யாழ் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு House Keepers மற்றும் உணவு பரிமாறுபவர்கள் (Waiters) தேவைப்படுகிறார்கள். நேரில் வரவும்.

சம்பளம் 5000 - 6000

077 373 4109



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 20.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.